1990 மே 8]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பெயரைப் பதிவு செய்துள்ளவர்களில் மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் பட்டம் பெற்றவர்களாக யாரும் தங்களைப் பதிவு செய்துகொள்ளவில்லை; பட்டதாரிகள், முதுகலைப் பட்டதாரிகள் மட்டும் தான் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து வைத்து இருக்கிறார்கள்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானியக் கோரிக்கை வந்த போது அமைச்சர் அவர்கள் அந்தக் குழு அமைக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இப்போது அந்தக் குழு கூடி இருக்கிறது. விரைவிலே பார்வையற்ற ஊனமுற்றவர்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்பு அளித்து, இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகப்படியான ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து இருக்கிறது என்ற சாதனையை அமைச்சர் அவர்கள் படைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, இந்த அரசு அந்தச் சாதனையைப் படைக்க நிச்சயமாக முயற்சி எடுக்கும்.

ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை.

* 2259 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டத்திலே தற்போது 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை இருக்கிறது. தற்போது 500-க்கு மேற்பட்ட வெளி நோயாளிகள் அங்கு வந்து சிகிச்சைப் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அதுபோல ஸ்ரீவைகுண்டத்தில் தாலுகா மருத்துவமனையிலே தினசரி கிட்டத்தட்ட 50-க்கு மேற்பட்ட நோயாளிகள் படுக்கை வசதி இல்லாமல் வெளியிலே

படுத்துக்கொண்டு சிகிச்சைப் பெறுகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் ஸ்ரீவைகுண்டம் தாலுகா மருத்துவமனையை 50 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக உயர்த்துவதற்கு வழி வகுத்துக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கே 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒரு ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்திலே செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. மேலும் அதை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்று சொன்னால், அதற்கு 6 ஏக்கர் நிலமாவது தேவைப்படும். அந்த 6 ஏக்கர் நிலத்தை அங்கே இருக்கிற அந்த மருத்துவமனையில் பெறமுடியாது. வேறு இடத்துக்குத்தான் மருத்துவமனையை மாற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அது குறித்து அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எழுதப்பட்டு இருக்கிறது. 6 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்திக் கொடுக்க முடியுமா என்று அவரிடம் கேட்கப்பட்டு இருக்கிறது. இதற்கிடையில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான சில கட்டிடங்களை மருத்துவமனைக்கு மாற்றும்படி கோரிக்கை எழுப்பப்பட்டு இருக்கிறது. இவைகளை எல்லாம் கலந்தாலோசித்த பிறகு அந்த மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்காக அரசு நிதி நிலைமைக்கு ஏற்ப முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் நகரப் பஞ்சாயத்திலே மண்கோட்டை என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினர்கூட டெப்போ வைப்பதற்கு இடம் வாங்கி அதை அமைத்து இருக்கிறார்கள். அங்கே போதுமான இடம் இருக்கிறது. ஆகவே அரசு அந்த உரிமையாளர்களிடத்திலே நிலத்தை வாங்கி ஸ்ரீவைகுண்டம் தாலுகா மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தும் பணி இப்போது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவரைச் சந்தித்து, நில உரிமையாளரையும் சந்தித்து, அதற்கான முயற்சிகளை மேற்கொள்வாரானால் அது அரசுக்கும் உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும்.

1990 மே 8]

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஸ்ரீவைகுண்டத்துக்கு அருகில் இருந்து கொண்டிருக்கிற என்னுடைய சாத்தான்குளத்தில் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாக ஆக்க வேண்டும் என்று வெகு நாட்களாக கோரிக்கை வைத்து இருக்கிறோம். அந்த மருத்துவமனை 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகவாவது ஆவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் மருத்துவமனையைப் பற்றிய அந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் இப்படித் தனியாகக் கேள்வி கேட்கிற நிலைமையை உண்டாக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர்.

*** 2520 திரு. சா பீட்டர் ஆல்போன்ஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கோட்டை தாலுகா தெற்குமேடு பஞ்சாயத்து பகுதியில் வாழுகின்ற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது எடுப்பதற்கில்லை.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தெற்குமேடு என்கிற கிராமம் புளியரை என்ற கிராமத்தோடு இணைந்து இருக்கிறது. ஒரே தெருவிலே ஒரு பக்கம் புளியரையும், இன்னொரு பக்கம் தெற்குமேடும் இருக்கிறது. தற்போது ஒரு பக்கம் மட்டும் பாதுகாக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் தெருவிலே அடுத்த பக்கத்திலே இருக்கிற மக்களுக்கு அந்தத் தண்ணீர் வழங்கப்படவில்லை. எனவே அந்தப் பகுதியிலே சட்ட ஒழுங்குப் பிரச்சினைகூட வருவதற்கு வாய்ப்பாக இருக்கின்ற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் அதை வேகமாகப் பரிசீலனைச் செய்து அமல்படுத்துவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.